யாழ். வலயக்கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உ/த) தவணைப் பரீட்சை
மார்ச் - 2014

FWC

தரம்- 12 (2015) | தமிழ் | நேரம் : 3.00 மணி

• பகுதி I இலுள்ள மூன்று வினாக்களுக்கும் விடையளிப்பதுடன் பகுதி II இல் அ, ஆ பகுதிகளிலுள்ள ஒவ்வொரு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி - I

01. தரப்பட்ட செய்யுள்களை வாசித்து, அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) நல்லுரை இகந்து புல்லுரை தாஅய்
பெயல்நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல
உள்ளம் தாங்கா வெள்ளம் நீந்தி
அரிது அவா உற்றனை நெஞ்சே! நன்றும்
பெரிதால் அம்ம நின்பூசல் உயர்கோட்டு
மகவுடை மந்திபோல
அகன் உறத் தழீஇக் கேட்டுநர்ப்பெறினே.

1) இப்பாடல் மூலம் ஆசிரியர் கூறவந்த விடயம் என்ன?
2) இப்பாடலின் பொருளை உமது சொந்த மொழிநடையில் எழுதுக.
3) இப்பாடலினூடாக வெளிப்படும் சங்க இலக்கியப் பண்புகள் எவை?

(2+4+4=10 புள்ளிகள்)

(ஆ) ஆ கொடியாயெனும் ஆவி காலும் அந்தோ
ஓ கொடிதே அறம் என்னும் உண்மை ஒன்றும்
சாக எனா எழும் மெய் தள்ளாடி வீழும்
மாகமும் நாகமும் மண்ணும் வென்ற வாளான்.

நாரியர் இல்லை இஞ்ஞாலம் எங்கும் என்ன
கூரிய வாள்கொடு கொன்று நீக்கி யானும்
பூரியர் எண்ணிடை வீழ்வன் என்று பொங்கும்
வீரியர் வீரம் விழுங்கி நின்ற வேலான்.

1) இப்பாடல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தை விளக்குக.
2) தசரதன் அடைந்த துயரம் எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளது?
3) இப்பாடல்களிற் கூறப்படும் தசரதனின் பெருமைகளை விளக்குக.

(2+4+4=10 புள்ளிகள்)

02. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து, 300-350 சொற்களிற் கட்டுரை எழுதுக.

1. ஊடகங்களிற் பெண்கள் பற்றிய சித்திரிப்பு.
2. தமிழ்த் திறனாய்வு வளர்ச்சியில் க.கைலாசபதியின் பங்களிப்பு.
3. திரைப்படங்களில் நாட்டார் பாடல்களின் செல்வாக்கு.
4. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.

(20 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

## 03. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) "உகரம்" இதழ் குவிந்து ஒலிக்கும் எழுத்து.
1) எனக்கு 2) எழுது 3) புயல் 4) அது

2) வளைநா வெடிப்பொலியாக அமைவது.
1) ப் 2) த் 3) ற் 4) ட்

3) உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாக அமைவது.
1) வரகு 2) காப்பு 3) பந்து 4) சால்பு

4) வேற்றுநிலை மெய்ம் மயக்கமாக அமையாதது.
1) மார்பு 2) வாழ்வு 3) பஞ்சு 4) பச்சை

5) கூட்டுப் பெயராக அமைவது
1) காவற்காரன் 2) முதலாளி 3) புகழ்ச்சி 4) நவீனத்துவம்

6) இராமன் காட்டுக்குப் போவது தான் நன்றெனக் கைகேயி நினைத்தாள். இதில் தொழிற்பெயர்.
1) இராமன் 2) காட்டுக்கு 3) போவது 4) வழி

7) கோதுமை மாவாற் செய்த இடியப்பம். இங்கு இடம்பெற்ற வேற்றுமையும் பொரு
1) 2, ஆக்கல் 2) 3, மூலப்பொருள் 3) 4, கலப்பு
4) 6, உடைமை 5) 5, நீங்கல்

8) விரவுத்திணைப் பெயராக அமைவது.
1) தாய் 2) மன்னன் 3) மாடு 4) கடுவன்

9) பலபொருள் குறித்த ஒரு சொல்லாக வரும் உரிச்சொல்
1) சால 2) உறு 3) தவ 4) நனி

10) எண்பதாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா
1) வெள்ளிவிழா 2) அமுதவிழா 3) பவளவிழா 4) வைரவிழா

ஆ) பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக. (10

1) உயிரளபெடைக்கு உதாரணம் தந்து விளக்குக.
2) மாற்றுப்பெயர் என்றால் என்ன? உதாரணத்துடன் விளக்குக.
3) ஆக்கப்பெயரை உதாரணத்துடன் விளக்குக.
4) வினைத்தொகைக்கு உதாரணம் தந்து விளக்குக.
5) இலக்கணப்போலி என்றால் என்ன? விளக்குக.



agaram.lk
Scanned with CamScanner

## பகுதி - II அ

04. வினைத்திட்பம் என்னும் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ) வினைத்திட்பம் என்றால் என்ன? அது வினைத்தூய்மை என்னும் அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டதற்கான காரணம் என்ன?

ஆ) வினைத்திட்பத்தின் பகுதிகளாகக் கூறப்பட்டவை எவை?

இ) வினைத்திட்பம் உடையார் அடையும் பயன்கள், அவர் வினை செய்யும் வகை பற்றிக் கூறப்பட்டவை எவை?

ஈ) வினைத்திட்பமில்லாதவரது இழிவு எவ்வாறு கூறப்பட்டுள்ளது? (20 புள்ளிகள்)

05. பண்டிதமணியின் நகைப்பூங்கொத்து என்னும் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) தலைவன் -தலைவியரிடையேயான காதல் உணர்வும் தாயின் இரக்ககுணமும் கட்டுரை ஆசிரியராற் சித்திரிக்கப்படும் விதம்.

2) கட்டுரை ஆசிரியரின் மொழிநடைச் சிறப்பு என்பவற்றை விளக்குக. (10X2=20 புள்ளிகள்)

## பகுதி - II ஆ

06. 1) சங்கமருவிய கால இலக்கியங்களை வகைப்படுத்துக.

2) "பல்லவர் காலப் பக்தி இலக்கிய வளர்ச்சிக்குக் காரைக்கால் அம்மையார் பிரபந்தங்களே வழி காட்டிகளாகும்" விளக்குக. (10X2=20 புள்ளிகள்)

07. 1) ஆரியச்சக்கரவர்த்திகள் கால இலக்கியங்களை வகைப்படுத்துக.

2) ஆரியச்சக்கரவர்த்திகள் கால இலக்கியப்பண்புகளை விளக்குக. (10X2=20 புள்ளிகள்)

08. **பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

1) சாபவிமோசனம் கதையில் இராமனின் பாத்திரப்படைப்புப் பற்றிய உமது மனப்பதிவைத் தருக.

2) பாரதமாதா திருப்பள்ளி எழுச்சியிற் பாரதியாரின் நாட்டுப்பற்று வெளிப்படுமாற்றினை விளக்குக.

3) தேம்பாவணி பைதிரம் நீங்கு படலத்தில் யேசு பிரானின் பெருமைகள் சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக.

4) பெரியாழ்வார் திருவாய் மொழியிற் கண்ணனின் குறும்புகள் வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக.

5) "பாணன் சூடிய பசும் பொற்றாமரை" என்னும் பாடலிற் பேகனின் கொடைச்சிறப்பு வெளிப்படுத்தப்படுமாற்றை விளக்குக.

(7+7+6=20 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner